**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

| | |
|---|---|
| அசல் வழக்கு எண்.727/2022 | இ.ம.எண். |
| எஸ்.சி.ஓ.பி.எண். | நி.வே.ம.எண். |

2024ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27-ந் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சியின் **பி.வா.சா.1** -ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின் படி திரு.ஜிதேந்திரா, பலகை எழுத்தர் என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வித்யா நாகராஜன் என்ற வித்யா | ஜாதி | : | |
| த/பெ | : | | மதம் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| வட்டம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

**பி.வா.சா.1 : முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கின் பிரதிவாதி ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகளை உண்மையென நேரில் அறிந்து கையெழுத்து செய்துள்ளேன். 18.03.2015ம் தேதியிட்ட வாதியின் கணவர் செந்தில்குமார் மீது ஈரோடு கருங்கல்பாளையம் காவல்நிலையத்தில் தாக்கல் செய்யப்பட்ட

குற்ற எண்.149/2015ல் இதச பிரிவுகள் 419, 468, 471, 420, 506 (ii)ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் கணினி பதிவிறக்க நகல் **பி.வா.சா.ஆ.1.** 02.12.2022ம் தேதியிட்ட ஈரோடு விரைவு குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.1ல் STC No.525/2019ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையின் கணினி பதிவிறக்க நகல் **பி.வா.சா.ஆ.2.** வாதியின் கணவர் செந்தில்குமார் மீது ஈரோடு குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.2ல் தற்போது நிலுவையில் உள்ள வழக்கு CC No.381/2019ன் முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்ற அறிக்கை நகல் **பி.வா.சா.ஆ.3**(சான்றிட்ட நகல் இந்த வழக்குடன் தொடர்புடைய OS 729/2022ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது). ஈரோடு விரைவு நீதிமன்றம் எண் 1ல் உள்ள STC 330/2022 வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காசோலை திருப்பப்பட்டதற்கான குறிப்பாணையின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.4.** இந்த வழக்கின் வாதி மீது இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள OS.1197/2023 வழக்கின் பிரது மற்றும் அதில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காசோலை எண்.000103 காசோலை மற்றும் ரிட்டன் மெமோவின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.5.** இந்த வழக்கின் வாதி மீது ஈரோடு முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள OS.1190/2023 வழக்கின் பிராது மற்றும் அதில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காசோலை எண்.000103 காசோலை மற்றும் ரிட்டன் மெமோவின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.6.** ஈரோடு விரைவு

குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.1ல் **STC** 330/2022ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள காசோலை ஜெராக்ஸ் **பி.வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது(சான்றிட்ட நகல் இந்த வழக்குடன் தொடர்புடைய **OS**.729/2022ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது).

**பி.வா.சா.1- வாதி தரப்பில் குறுக்கு விசாரணை -**

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.